


சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் கிழக்கு பகுதி, 68அ வட்டக் கழகச் செயலாளரும் மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத்தலைவருமான ரவி (எ) எஸ்.சிவக்குமாரின் இல்லத் திருமண விழாவில் பங்கேற்று, மணமக்கள் டாக்டர் எஸ்.சபரிவாசன் டாக்டர் வி.கார்த்திகாராஜம் ஆகியோரை கழக நாடாளுமன்ற குழுத் துணைத்தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. வாழ்த்தினார். உடன் பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி.எப். முரளி, சென்னை கிழக்கு மாவட்டக் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ம.அசோக் குமார், துணை அமைப்பாளர்கள் த.விஜயகுமார், கே.ஜெயகுமார் மற்றும் கழக முன்னணியினர் கலந்துகொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி கள்ளிமந்தயத்தில் வாக்காளர்களுக்கு முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. நன்றி தெரிவித்து பேசினார்.

### இடஒதுக்கீட்டுத் தியாகிகள் மண்டபத்திற்கு

# பா.ம.க. தலைவர் அன்புமணி வருகை எப்போது?

## தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. அன்னியூர் சிவா கேள்வி!



விழுப்புரம், ஜூலை 14 -

பா.ம.க., தலைவர் அன்பு மணி, இடஒதுக்கீடு போராளிகள் சிலைக்கு மரியாதை செலுத்துவாரா என தி.மு.க., முன்னாள் எம்.எல்.ஏ., அன்னியூர் சிவா கேள்வி எழுப்பியுள்ளார்.

கரூர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 31 பேருக்கு, அரசு வேலையை விஜய் வழங்கியுள்ளார்.

‘ வன்னியர்களுக்கு 20 சதவீத தனி இட ஒதுக்கீடு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த 1987ம் ஆண்டு, தொடர் சாலை மறியல் நடைபெற்றது. இதில், போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், 21 பேர் உயிரிழந்தனர். இவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், உடனடியாக அரசு வேலை வழங்க வேண்டும் என பா.ம.க. தலைவர் அன்புமணி அரசை கேட்டுள்ளார்.

இந்நிலையில், தி.மு.க., மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளரான முன்னாள் எம்.எல்.ஏ., அன்னியூர் சிவா வெளியிட்டுள்ள அறிக்கையில் ,

‘கடந்த 1987 ம் ஆண்டு வன்னியர் சங்கத்தின் இட ஒதுக்கீடு போராட்டத்தின் போது போலீசார் துப்பாக்கி சூட்டியில் உயிர் நீத்த, 21 பேரின் சிலையுடன் கூடிய நினைவு மணி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த தி.மு.க., ஆட்சியின்போது, 2025ம் ஆண்டு, முதல்வர் ஸ்டாலின் நேரில் திறந்து வைத்து, இடஒதுக்கீடு போராட்ட தியாகிகளின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அவர்களது குடும்பத்தினரை அழைத்து, அரசு சார்பில் கவுரவப்படுத்தினார்.

தமிழக அரசு அமைத்துள்ள இடஒதுக்கீட்டு போராட்ட மணி மண்டபத்திற்கு, பா.ம.க., தலைவர் அன்புமணி, முதலில் நேரில் வர வேண்டும்.

அங்குள்ள தியாகிகளின் சிலைகளுக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்த வேண்டும். பின்னர், அரசு வேலை பெற்றுத் தரும் முயற்சியில் இறங்கலாம்’ என கூறியுள்ளார்.

### தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய இளைஞருக்கு

# ரூ.25 ஆயிரம் மதிப்பிலான மருத்துவ உதவித் தொகைக்கான காசோலை!

## மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர், ஜூலை 14-

கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி கழக இளைஞர் அணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் பொருளாதார ரீதியாக நலிவுற்று மருத்துவ சிகிச்சை பெற்று வரும் மக்களுக்கு தொடர்ந்து மருத்துவ உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, திருவள்ளூர் மத்திய மாவட்டம், பூந்தமல்லி கிழக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த விக்னேஷுக்கு ரூ.25 ஆயிரம் மதிப்பிலான மருத்துவ உதவித் தொகைக்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி ஆவடியில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சு ரே ஷ் கு மா ர் முன்னிலையில், பயனாளி விக்னேஷுக்கு ரூ.25 ஆயிரம் மதிப்பிலான மருத்துவ உதவித் தொகைக்கான காசோலையை வழங்கினார்.

அப்போது பேசிய முன்னாள் அமைச்சர் , சமூகநலப் பணிகளுக்கு எப்போதும் முன்னுரிமை அளித்து வரும் தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை, ஏழை மற்றும் எளிய மக்களின் மருத்துவச் சுமையை குறைக்கும் நோக்கில் பல்வேறு உதவித் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருவதாகவும், பொதுமக்களின் நலனே கழகத்தின் முக்கிய இலக்காக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், டி.பிரியகுமார், சதீஷ்குமார், ஆவடி மாநகர இளைஞரணி நிர்வாகிகள் ஜி.துர்கா பிரசாத், இள.ஸ்ரீதர், புவனேஷ், மகேஷ் ரங்கநாதன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் க.பரிமேலழகன், ஒன்றிய இளைஞர் அணி ஞானமூர்த்தி, டி.துரைமுருகன், லிங்கேஷ் குமார், எம்.கே.பி.பாபு, உள்ளிட்ட பல்வேறு கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்

நிகழ்ச்சி நிறைவில், மருத்துவ உதவித் தொகையை பெற்றுக் கொண்ட பயனாளி விக்னேஷ், தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளைக்கும், கழகத் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் உள்ளிட்ட கழக நிர்வாகிகளுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்டு தொடர்ந்து மனிதநேயப் பணிகளை மேற்கொண்டு வரும் தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளையின் இந்த உதவி தமக்கு மிகுந்த ஆறுதலாக அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.




திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் சத்யா ஏஜென்சி புதுப்பிக்கப்பட்டுள்ள ஷோரூமை திறப்பு விழா மாமன்ற உறுப்பினர் சத்யா கோ. ரவி முன்னிலையில் நடைபெற்றது. இதில் மத்திய மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு திறந்து வைத்தார். உடன் சத்யா ஏஜென்சி பொது மேலாளர் சீதாராமன், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதி செயலாளர் ஜி.ராஜேந்திரன், ப.ச.கமலேஷ், வழக்கறிஞர் எஸ்.மூர்த்தி, யுவராஜ், சண்முகசுந்தரம், இளங்கோ, வின்செண்ட், மனோகர், வெங்கடேசன், ராஜா, டாகடர் ராஜேஷ், துளசிங்கம் சக்திவேல், வியாபாரி சங்க தலைவர் அய்யாதுரை செயலாளர் தாமோதரன், கௌரவ தலைவர் வேலுச்சாமி உள்பட பலர் உள்ளனர்.

### முனைவர் மா.இராசேந்திரன் தலைமை! – தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில்

# மறைமலையடிகள் 150வது பிறந்தநாள் விழா!

## குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை, ஜூலை 14 -

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் மறைமலையடிகள் 150வது பிறந்தநாள் விழா 15.7.2026 புதன்கிழமை காலை 11 மணியளவில் சென்னை பல்கலைக்கழகம், நூற்றாண்டு விழா கட்டிடம்,முதல் தளம் அறை எண் 50ல் ( சேப்பாக்கம் ) நடைபெறுகிறது.

விழாவில் சென்னை பல்கலைக்கழகம் சைவ சித்தாந்தத் துறை தலைவர் பேராசிரியர் முனைவர் சா.சரவணன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன் தலைமை வகிக்கிறார்.

விழாவில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் சிறப்புரையாற்றுகிறார்.

துணை வேந்தர் பொறுப்பு குழு உறுப்பினர் பேராசிரியர் முனைவர் எஸ். ஆம்ஸ்ட்ராங் முன்னிலை வகிக்கிறார்.

இவ்விழாவில் முனைவர் சாரதா நம்பியாரூரன், சென்னை பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் முனைவர் ரீட்டா ஜான், இலங்கை திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் க.ச. குகதாசன், கனடா அனைத்துலகத் தமிழ் பேரவை தலைவர் நிமால் விநாயகமூர்த்தி, சென்னை பல்கலைக் கழக தமிழ் மொழித்துறை உதவி பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் வாணி அறிவாளன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

சென்னை பல்கலைக் கழக தமிழ் இலக்கியத் துறை உதவி பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் வே. நிர்மலர் செல்வி நன்றியுரையாற்றுகிறார்.

முனைவர் ஒப்பிலா மதிவாணன் ( தமிழ் வளர்ச்சிக் கழகம் ) நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

### காவிரி டெல்டா மாவட்டங்களை

# வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவிக்க வேண்டும்!

## மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!



சென்னை, ஜூலை 14 -

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்கள் இன்று கடுமையான வேளாண் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. தென்மேற்கு பருவமழை பொய்த்ததுடன், காவிரி நீர் உரிய அளவில் தமிழகத்திற்கு கிடைக்காத தால் குறுவை சாகுபடி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் கடுமையான வாழ்வாதார நெருக்கடியில் சிக்கி யுள்ளனர்.

வழக்கமாக ஜூன் 12ஆம் தேதி திறக்கப்படும் மேட்டூர் அணை, போதிய நீரிருப்பு இல்லாத காரணத்தால் திறக்கப்படாதது டெல்டா விவசாயத்திற்கு மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. காவிரி நீர்வழங்கல் தொடர்பாக நடுவர் மன்றமும் உச்சநீதிமன்றமும் நிர்ணயித்துள்ள அளவிற்கு கர்நாடக அரசு நீரை திறந்து விடாததால் தமிழக விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த ஆண்டு ஆறு இலட்சம் ஏக்கருக்கும் அதிகமாக நடைபெற்ற குறுவை சாகுபடி, இந்த ஆண்டு கடுமையாக குறைந்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு சுமார் 1.94 இலட்சம் ஏக்கரில் நடைபெற்ற குறுவை சாகுபடி இந்த ஆண்டு சுமார் 89 ஆயிரம் ஏக்கராகக் குறைந்துள்ளது. அதே போல் திருவாரூர் மாவட்டத்தில் 1.91 இலட்சம் ஏக்கரில் இருந்து வெறும் 64 ஆயிரம் ஏக்கராக சாகுபடி பரப்பளவு சரிந்துள்ளது. நாகப்பட்டினம் உள்ளிட்ட கடைமடை பகுதிகளில் நிலத்தடி நீர் வசதிகள் குறைவாக இருப்பதால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

நிலத்தடி நீரை நம்பி சாகுபடி மேற்கொண்டுள்ள விவசாயிகளும் மின்வெட்டு, குறைந்த மின்னழுத்தம், நிலத்தடி நீர்மட்ட சரிவு போன்ற காரணங்களால் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேட்டூர் அணை திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் நிலத்தை உழுதும், விதைப்பிற்காகத் தயார்படுத்தியும் இருந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் முதலீடு செய்த தொகையை இழந்து வேதனையில் உள்ளனர்.

குறுவை சாகுபடி நடைபெறாததால் விவசாயத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கிராமப்புற பொருளாதாரமே கடுமையாக பாதிக்கப்பட்டு, விவசாயத் தொழிலாளர்கள் வேறு வேலைகளைத் தேடி இடம்பெயர வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. விவசாயி கள் மட்டுமல்லாமல் கால்நடை வளர்ப்போரும் தீவனப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே தமிழக அரசு உடனடியாக காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதி களாக அறிவிக்க வேண்டும். குறுவை சாகுபடி செய்ய முடியாமல் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.15,000 வீதம் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்.

மேலும் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் “விதைப்பு/நடவு மேற்கொள்ள இயலாமை தொடர்பான இடர்” பிரிவின் அடிப்படையில் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல் சம்பா சாகுபடியை பாதுகாக்க சிறப்பு சம்பா தொகுப்பு திட்டத்தை அறிவித்து, மானிய விலையில் விதைகள், உரங்கள், டீசல் உள்ளிட்ட உள்ளீடுகளை வழங்க வேண்டும். நீண்டகாலமாக காத்திருக்கும் விவசாயி களுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும்.

காவிரி நீர் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக கர்நாடக அரசின் மீது தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை தமிழக அரசு தீவிரப்படுத்த வேண்டும். காவிரி டெல்டா விவசாயத்தை பாதுகாப்பது என்பது விவசாயிகளை மட்டுமல்ல, தமிழகத்தின் உணவுப் பாதுகாப்பையும் பாதுகாப்பதாகும் என்பதை அரசு உணர்ந்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத் துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### பகுதிச் செயலாளர் வி.இ.மதியழகன் எம்.சி. நிகழ்ச்சி ஏற்பாட்டில் – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் 1000 நிர்வாகிகளுக்கு நல உதவிகள்!

## கழக கல்வியாளர் அணிச் செயலாளர் தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. வழங்கினார்!

சென்னை, ஜூலை 13 -

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, 1000 கழக குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று (13.07.2026 - திங்கட்கிழமை) காலை 11 மணிக்கு, நீலாங்கரை, பி.டி.என். திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் நீலாங்கரை வி.இ.மதியழகன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கழக கல்வியாளர் அணிச் செயலாளரும், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் கலந்து கொண்டு 1000 கழக நிர்வாகிகளும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதில் சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்க நல்லூர் கிழக்கு பகுதிக்குட்பட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.